# புதுக்குடியிருப்பு பிரதேச சபை
# முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 13 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய புதுக்குடியிருப்பு பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 03 | 3,059,649 | - | |
| அதிகரித்துக் கூறல்கள் | 02 | 146,700 | 02 | 1,906,611 |
| விடுபட்ட தவறு | - | | 01 | 786,761 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 27,086,938 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 7,490,686 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா.43,933,815 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 9,949,305 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 4,323,639 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2012 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| இறைகளும் வரிகளும் | 12 | 5,361 | - |
| குத்தகை வாடகைகள் | 19,073 | 591 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 587 | 1,726 | - |
| வேறு வருமானங்கள் | 11,249 | 13,294 | 8,148 |
| | 30,921 | 20,972 | 8,148 |

### 2.3.2 கடை வாடகை

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 42 எண்ணிக்கையான முறிகண்டி கடை வாடகை வருமான நிலுவையான ரூபா 656,200 ஐ அறவிடுவதற்கு சபை ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்.

நீதவான் நீதிமன்றிலிருந்து மீளாய்வண்டில் பெறப்படவேண்டிய குற்றப் பணங்களும் தண்டப் பணங்களும் ரூபா 5,495,479 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்.

(அ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையாகிய ரூபா 101,200 அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப் பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டுக்கான பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டண விபரம் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்து முமகாமைத்துவம்

### 2.4.1 கணிப்பீட்டு சபை அறிக்கை

கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் காணப்படுவனவற்றுக்கும் உள்ளவாறானவற்றிக்கும் இடையே 6 விடயங்களிலான மிகைகளும் குறைவுகளும் அவதானிக்கப்பட்டன.

### 2.4.2 முற்பணங்கள்

(அ) 2008 – 2012ம் ஆண்டு வரையும் சபை நிதியில் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 27,232,376 நிதியாண்டு இறுதி வரை தீர்வு செய்யப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008ம் ஆண்டில் அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட சம்பள முற்பணங்கள் ரூபா 130,000 குறித்த அலுவலரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010ம் ஆண்டில் முத்து ஐயன் கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 274,367 அறிக்கையிடும் திகதி வரையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010ம் ஆண்டின் வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 20,000 அறிக்கையிடும் திகதி வரையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 பதவியினர் கடன்**

இறந்த / இளைப்பாறிய மூன்று அலுவலர்களிடமிருந்து அறவிடவேண்டிய பதவியினர் கடன் நிலுவையை ரூபா 102,205 பணிக்கொடை மற்றும் பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு | | விபரம் |
|---|---|---|
| (அ) | 1988ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் (நிதி நிர்வாக) ஒழுங்கு விதி | |
| (i) | அத்தியாயம் II பிரிவு 5 உப பிரிவு XII | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொண்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. |
| (ii) | அத்தியாயம் III பிரிவு 29 | நிதியாண்டு இறுதியில் அலுவலரின் கையிலும் காசுமீதி ரூபா 1,394,806 காணப்படுவது மொத்த சேகரிப்புகள் நாள்தோறும் வங்கியில் இடப்படாமையினை காட்டுகின்றது. |
| (iii) | அத்தியாயம் III பிரிவு 59, 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. |
| (iv) | அத்தியாயம் III பிரிவு 65 | வியாபார உரிமம் சம்பந்தமாக அரசிறை எழுதுநர் தவறுநர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கவில்லை |
| (v) | அத்தியாயம் III பிரிவு 66 | செயலாளர் 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(4)ம் பிரிவின் கீழ் ரூபா 8,148,298 நிலுவையை .அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (vi) | அத்தியாயம் IV பிரிவு 97 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் குறிப்பிடப்பட்ட இனங்காண்பதற்கான இலக்கம் மற்றும் செலவின விடயம் என்பன வரவு, செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விதத்தில் பதிவு செய்யப்படவில்லை. |
| (vii) | அத்தியாயம் IV பிரிவு 112 | வேலைகள் பொருத்தமுற நிறைவேற்றப் பட்டதென உறுதிப்படுத்திய சான்றிதழ் பெறப்படவில்லை. |
| (viii) | அத்தியாயம் IV பிரிவு 113 | நிறுத்தி வைக்கப்படும் பணம் சம்பந்தமாக வேலையானது நியதிக்கமைய திருப்திகரமாக நிறைவடைந்ததைக் குறிக்கும் சான்றிதழ் பெறப்படவில்லை. |
| (ix) | அத்தியாயம் V பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 27,232,377 முற்பணத்தை அறவிட செயலாளர் நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ஆ) | 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்<br>பிரிவு ஏ உபபிரிவு 132 (ஒ) | கல்விசார் நோக்குகள் சம்பந்தமான விடயங்களுக்கான செலவினம் ரூபா ஆயிரத்தினை விஞ்சுகின்றபோது அமைச்சரின் முன் அனுமதி பெற வேண்டுமென்றபோதும் முன் அனுமதியின்றி ரூபா 29,550 மொறட்டுவ பல்கலைக் கழக விரிவுரையாளர் மற்றும் மாணவர்க்கு உபசரணைக்காக செலவிடப்பட்டுள்ளது. |

(இ) நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதி ஒழுங்குவிதி 1646 | சபையின் வாகனங்களினது நாளாந்த ஓட்ட அறிக்கைகளும் மாதாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலக்கம் 700 பிரிவு (v) | ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வியின் இரண்டாம் பிரதி கேள்விச் சபையின் சிபார்சுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | இலக்கம் 702 பிரிவு 03 | ஒப்பந்தங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 212,411 பெறுமதியுடைய வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வழங்கல் கைநூல் பிற்சேர்க்கை 19 இன் 9.3.1ம் பிரிவு | வாகனத் திருத்தங்கள் ரூபா 519,987 தொடர்பில் அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

### 2.6.1 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காலதாமதம்

நிதியாண்டில் நிறைவேற்ற வேண்டிய இரண்டு செயற்திட்டங்கள் நிதியாண்டு இறுதிவரை நிறைவேற்றப்படாது ரூபா 348,240 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.6.2 முற்றாகக் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

சபையினால் பாதீடு செய்யப்பட்ட ரூபா 4 மில்லியன் பெறுமதியான இரண்டு மூலதன வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படாது சபைநிதி ரூபா 6 மில்லியன் வங்கியில் நிலையான வைப்பிலிடப்பட்டிருப்பது பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் முடக்கப்பட்டுள்ளமையை காட்டுகின்றது.

## 2.7 செயற்பாடுகளின் செயற்திறனின்மை

2010ம் ஆண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்கப் பெற்ற சனசமூக நிலைய நன்கொடை ரூபா 164,937 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) ஆளணி

(உ) நன்கொடை

(ஊ) வாகனங்களின் பயன்பாடு

(எ) நானாவித வைப்புகள்

(ஏ) வரவு செலவுத்திட்டம்